# வேலூர், தொழிலாளர் இணை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
## முன்னிலை:தி.புனிதவதி பி.ஏ., பி.எல்.,

### சுருக்கம்

பணிக்குழு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்குத் தேர்வு – 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018–ஆம் ஆண்டிற்கான காலத்திற்கு தேர்வு செய்யப்பட்டு, தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – வேலூர், தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்திற்கு இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன் முறை செய்தும் தகுதி காண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

அ/ 2076/2021 நாள்: 31.08.2021

படிக்கப்பட்டது.

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண்.1022/PSD-G2/2019, நாள்:18.02.2019.
2. சென்னை–6, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.ஜி3/44771/2018–1, நாள்:01.03.2019.

ஆணை:

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 2015–16, 2016–17 மற்றும் 2017–18ஆம் ஆண்டிற்கான காலத்திற்கு இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு மேலே–1ல் படிக்கப்பட்ட கடிதத்தின் வாயிலாக தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு மேலே–2ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணைகளின்படி இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் செய்து வேலூர், தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டு, 27.03.2019 அன்று முற்பகல் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து கொண்டார்.

அன்னாரது தெரிவு உறுதி செய்யப்படுவதாக தேர்வாணைய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதால், அவரது பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 27.03.2019 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்யப்பட வேண்டும்.

மேலும், தனியரது பணியினை கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்திடல் வேண்டும் என தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon’ble High Court of Madras/Madurai Bench of the Hon’ble High Court of Madras relating to Combined Civil Services Examination –IV for the year 2015-2016, 2016-2017, and 2017-2018 recruitment.”

(திருப்புக)

எனவே தனியரது பணிவரன் முறையானது மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன் முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திருமதி.அ.வித்யா,<br>இளநிலை உதவியாளர்,<br>தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகம், வேலூர். | 27.03.2019 முற்பகல் | 27.03.2019 முற்பகல் |

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 30–ன் படியும் மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் பொது விதி 32–ன் கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் மேற்காணும் நபர் பணியில் சேர்ந்த நாள் முதல் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு கால தகுதி காண் பருவத்தில் வைத்து உத்தரவிடப்படுகிறது.

இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெறும் பணியாளர், பணியில் சேர்ந்த நாளிலிருந்து இரண்டாண்டு காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், பவானி சாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

31/8/19

தொழிலாளர் இணை ஆணையர்
வேலூர்

31/8/19 31/8

பெறுநர்

திருமதி.அ.வித்யா,
இளநிலை உதவியாளர்,
தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகம்,
வேலூர்.

நகல்

1. இருப்புக்கோப்பு
2. பணிப்பதிவேடு

நகல் பணிந்தனுப்பப்படுகிறது

1. தொழிலாளர் ஆணையர், சென்னை–6.
2. கூடுதல் தொழிலாளர் ஆணையர், சென்னை–6.